நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில், தென்மேற்கு பருவமழை குறித்த ஆய்வுக்கூட்டம் நேற்று (17.06.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ். நிஷா உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா உட்பட பலர் உள்ளனர்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (17.06.2025) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தலைமையில் பயிர் காப்பீடு திட்டம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் / வேளாண்மை உழவர் நலத் துறை செயலாளர்வ. தட்சிணாமூர்த்தி, , வேளாண்மைத் துறை இயக்குநர்பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர்பி.குமரவேல் பாண்டியன், , மற்றும் அரசு உயர் அலுவலர்கள், காப்பீட்டு நிறுவன அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க ஸ்டாலின் –

தமிழ்நாட்டின் மக்கள் நலனுக்காக அயராது உழைத்து வருகிறார்!

ஆவடி பொதுக்கூட்டத்தில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பெருமிதம்!

திருவள்ளூர் ஜூன்.18-

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி வடக்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் முன்னிட்டு ஆவடி அடுத்த சேக்காட்டில் செம்மொழி நாள் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்க நிகழ்ச்சி பகுதி செயலாளர் ஜி. நாராயண பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது இதில் ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி, ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் அவைத்தலைவர் துரைராஜ் பகுதி கழக நிர்வாகிகள் ஜோ.ஜான்சன்ரோசாரியோ, அ.வீரபாண்டியன் நளினி கோபி, எ.ஹாஜாசெரிப், சி.இராமமூர்த்தி, என். விஜயகுமார், வி.நரேந்திரன், நா.விஜயகுமார், ஜா.நவ்சாத், எஸ்.அபீப், எம்.ஐம்பு, உ. நரேஷ் முன்னிலை வகித்தார்கள் இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் பொதுமக்களுக்கு நலத்திட்டங்களை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் சாமு.நாசர் மத்திய அரசு நம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதியை இன்னும் வழங்காமல் காலம் தாழ்த்தி வருகிறது. காரணம் கேட்டால் மும்மொழி கொள்கைக்கு கையெழுத்திட்டால் நிதியை வழங்குவோம் என கூறுகிறார்கள்.

நீங்கள் நிதியை வழங்காவிட்டாலும் பரவாயில்லை எக்காலத்திலும் தமிழ்நாடு மும்மொழியை கொள்கையை ஏற்காது என திட்டவட்டமாக நம் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

இன்று உலகத்தையே ஆளக்கூடிய கூகுள் நிறுவன நம் தமிழ்நாட்டை சேர்ந்த சுந்தர் பிச்சை தான் விண்வெளியில் ஏவுகணை செலுத்தியதும் நம் தமிழ்நாட்டில் அரசு பள்ளியில் படித்த அப்துல் கலாம் ஐயா அவர்கள் தான். யாரும் எட்ட முடியாது அளவு சாதனைகளை படைத்து வருவது நம் தமிழர்கள் தான்.

தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக அயராது பம்பரம் போல் சுற்றி வரும் நம் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் சொன்னதையும் செய்தார் சொல்லாதவற்றையும் செய்தார் என புகழாரம் சூட்டினார். இந்நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர்கள் ஈரோடு இறைவன், பேரரசன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ் , மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஜெயபாலன், பகுதி செயலாளர்கள் பொன் விஜயன், ஜி. ராஜேந்திரன், பேபி சேகர், நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், பெ.வினோத், எம்.மோகன், துர்கா பிரசாத், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் முடிவில் வார்டு செயலாளர்கள் பார்த்திபன், டி.வி. ரவிக்குமார், பன்னீர்செல்வம் நன்றி கூறினர்.

எஸ். மோகன் பங்கேற்பு! திருவொற்றியூர் மேற்குப் பகுதி

5 வது வட்டத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் வை.ம.அருள்தாசன் அறிக்கை!

சென்னை,ஜூன்.18

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் ஆணையேற்று ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தை நிலை நிறுத்தி சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி 5 வட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மாதாவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ வழிகாட்டுதலில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் தலைமையில் இன்று (18.6.25) புதன்கிழமை நடைபெறுகிறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாநில வர்த்தக அணி துணை தலைவர் திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் எஸ். மோகன் அவர்கள் பங்கேற்று ஆலோசனை வழங்கும் நிகழ்வில் பகுதி கழக நிர்வாகிகள் ந. திருசங்கு, இ. குமரவேல் யு. எஸ். குறளரசன் ஏ. இந்துமதி எம். வஜ்ரவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்டம் 5 நேரம் மாலை 5 :00 மணி இடம் வடக்கு பாரதியார் நகர் வெங்கடேஸ்வரா திருமண மண்டபம் வட்டக் கழக செயலாளர் கே. பி. சொக்கலிங்கம் ஏற்பாட்டில் நடைபெறும் இக்கூட்டத்தில் மாநில வர்த்தக அணி துணைத் தலைவர் எஸ். மோகன் நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் குறித்தும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்க உள்ளார்.

அது சமயம் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் பாக முகவர்கள், BLC மற்றும் சமூக வலைதள பாக நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் வை.ம. அருள்தாசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. – க.தனசேகரன் எம்.சி. – கே.கண்ணன் எம்.சி. பங்கேற்பு!

கலைஞர் நகர் - 137 ஆ வட்டத்தில் பாகம் வாரியாக செயல்வீரர்கள் கூட்டம்!

வி.உமாகாந்த் தலைமை – வட்டச் செயலாளர் அ.கதிரேசன் அறிவிப்பு

சென்னை, ஜூன் 18 -

கலைஞர் நகர் தெற்குப் பகுதி 137 ஆ வட்டத்தில் அனைத்து பாகங்களின் செயல்வீரர்கள் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. அதன்படி, இன்று நடைபெறும் கூட்டம் குறித்து வட்டச் செயலாளர் அ.கதிரேசன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான

மா.சுப்பிரமணியம் ஆலோசனைப்படி கலைஞர் நகர் தெற்கு பகுதி

137 ஆ வட்ட கழகத்தில் பாகவாரியாக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சி அண்ணா மெயின் ரோடு கலைஞர் நகர் தெற்கு பகுதி

அலுவலகத்தில் இன்று (18.06.2025 - வியாழன்) மாலை 06:00 மணிக்கு பாகம் எண் 147

பாக முகவர் ஜெ.சீனிவாசன், பாகம் எண் 150 ராஜேஸ்வரி, 6.30 மணிக்கு, பாகம் எண்

151, பாகம் முகவர் கோகுல்,

இரவு 7:00 மணிக்கு, பாகம் எண் 152 பாக முகவர்

செல்வம், 7:30 மணிக்கு, பாகம் எண் 161 பாக முகவர் மகாலக்ஷ்மி, 8

மணிக்கு, பாகம் எண் 162 பாக முகவர் செந்தில்குமார், 8:30 மணிக்கு

நடைபெறுகின்றது.

இந்த நிகழ்ச்சிக்கு விருகம்பாக்கம் தொகுதி பொறுப்பாளரும் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளருமான வி.உமாகாந்த் தலைமை தாங்கி ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகராஜா, சென்னை மாநகராட்சி கணக்குக் குழு தலைவர் க.தனசேகரன், பகுதி கழக செயலாளர் கே.கண்ணன் எம்.சி. (தலைமை செயற்குழு உறுப்பினர்), உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராஜன் ஆகியோர் ஆலோசனை வழங்குகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார், எஸ். நிஷா சையத், பகுதி கழக

நிர்வாகிகள் எஸ்.உமாபதி, அ.பாபு, அஜந்தா ரவி, தியாகு மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்கள்.

தலைமை கழகத்தின் ஆலோசனைப்படி பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். தலைமை கழகத்தின் ஆலோசனைப்படி நூறு நபர்களுக்கு ஒரு பாக உறுப்பினர் என்பதை சரியாக கடைப்பிடித்து ஆலோசனை வழங்கப்படுகிறது

மற்றும் (BLA2) (BLC) (BDA) அனைத்து உறுப்பினர்களும் தவறாமல் கலந்து

கொள்ளுமாறு வட்டச் செயலாளர் அ.கதிரேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

பல்லாவரம் வடக்கு பகுதி தாம்பரம் மாநகராட்சி 15 வது வார்டு சார்பில் பாக முகர்கள் BLA2 (பாகம் 142) ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. தாம்பரம் மாநகராட்சி 15 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வட்ட கழக செயலாளர் டி.வி.ராஜா ஏற்பாட்டில், வட்ட பொருளாளர் எஸ்.அம்பேத்குமார் தலைமையில், தலைமை பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், மாவட்ட பிரதிநிதி குளத்துமேடு மு.நாகலிங்கம் முன்னிலை, பல்லாவரம் தொகுதி பார்வையாளர் திரு.ரஃபி அஹமத், பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் 2வது மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, ஒருங்கிணைப்பாளர் பகுதி துணைச் செயலாளர் வ.முத்து, காஞ்சிபுரம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன் சிறப்புரையாற்றினர். உடன் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் டி.வி.ஆர்.கௌதம் பாபு, வட்ட இளைஞரணி அமைப்பாளர் எஸ்.சரவணபாலன் மற்றும் பாக முகவர்கள், வட்ட கழக நிர்வாகிகள், இளைஞரணி, மகளிரணி, மாணவரணி உடனிருந்தனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைத் தலைவர்

தாம்பரம் என்.ஷாஜகான் இல்லத் திருமணம்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில்

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. – இ.கருணாநிதி எம்.எல்.ஏ. வாழ்த்துகின்றனர்.

சென்னை, ஜூன் 18 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைத் தலைவர் தாம்பரம் என்.ஷாஜகான் இல்லத் திருமண விழா நாளை (19-6-2025 - வியாழன்) மாலை 6 மணிக்கு படப்பை கரசங்காலில் ஹார்ஷா கார்டனில் நடைபெறுகிறது. மணமக்கள் எஸ்.அன்சியா பர்வீன் - எம்.இம்ரான் ஜலீல் ஆகியோரின் திருமணத்திற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை தாங்குகிறார்.

50 -வது வட்டச் செயலாளர் ஆர்.ஜீவன் வரவேற்கிறார். மண்டலக் குழுத் தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், எஸ்.ஆல்பர்ட் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக பொருளாளர் - கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாநகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், படப்பை ஆ.மனோகரன், ஆதிமாறன், எஸ். சேகர், பகுதிச் செயலாளர்கள் த.ஜெயக்குமார், ஆ.நடராஜன், இரா.சுரேஷ், வே. கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட்

அணிகளைச் சார்ந்த இரா.நரேஷ் கண்ணா, பொன்.சதாசிவம், வ.விஜயரங்கன், மாவட்ட சிறுபன்மை நல உரிமைபிரிவு நிர்வாகிகள் வி. எல்.டி. ஜார்ஜ், ஆ.தீபக் சாமுவேல், ஜி.ஏ.ராயப்பா, டி.ஆரோக்கியராஜ், கா.அல்தாபி உசேன், ஏ.கிறிஸ்டோபர், ஐ.அலிசபர், பி.ஜாபர்அலி மற்றும் வழக்கறிஞர் டாக்டர். ஆர்.எஸ்.கிருத்திகா தேவி, எம்.கல்யாணி, மண்ராஜன், ஈ.நடராஜன், இரா.ம.ராமமூர்த்தி, விக்னேஸ்வரன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

எஸ்.மோகன் பங்கேற்பு! வை. ம. அருள்தாசன் முன்னிலை! திருவொற்றியூர் மேற்குப் பகுதி

1,2,3,3(அ) 4,6 ஆகிய வட்டங்களில் ஆலோசனைக் கூட்டம்!

மு.சிவக்குமார், டி. சேகர், மு. மாணிக்கவேலன், பி. தம்பியா, கே. பவுல், கி. கண்ணன் ஏற்பாடு!

சென்னை,ஜூன்.18-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆணையேற்று ஓரணியில் தமிழ்நாடு என்பதை முன்னிறுத்தி சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ வழிகாட்டுதலில் திருவொற்றியூர் மேற்கு பகுதிக்குட்பட்ட 1,2,3,3(அ) ஆகிய வட்டங்களில் 14.6. 25 அன்றும் அதனைத் தொடர்ந்து 4 மற்றும் 6 ஆகிய வட்டங்களில் 15-6-25 அன்று நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாநில வர்த்தக அணி துணைத்தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் எஸ். மோகன் பங்கேற்று பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டு வரும் காலங்களில் நடைபெற இருக்கின்ற தேர்தல்கள் குறித்தும் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்கினார்.

1 வது வட்டக் கழக செயலாளர் மு.சிவகுமார் ஏற்பாட்டிலும், 2 வது கழக பொறுப்பாளர் டி. சேகர் ஏற்பாட்டிலும், 3 வது வட்டக் கழக செயலாளர் மு. மாணிக்கவேலன் மற்றும் 3(அ) வட்டக் கழக செயலாளர் பி. தமிழரசன் (எ) தம்பியா ஆகியோரின் ஏற்பாட்டிலும் 14-6-25 அந்தந்த வட்டங்களில் மாலை 5 :00 மணியளவில் தொடங்கி நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து 15.6-25 அன்று மாலை 5:00 மணி அளவில் 4 வது வட்ட கழக செயலாளர் கே.பவுல் ஏற்பாட்டிலும் மற்றும் 6 வது வட்டக் கழக செயலாளர் கி. கண்ணன் ஆகியோரின் ஏற்பாட்டிலும் அந்தந்த வட்டங்களில் மாலை 5:00 மணியளவில் தொடங்கி நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாநில சட்டத்துறை துணை செயலாளர் முனைவர் ஜி. சந்திர போஸ், தலைமை கழக வழக்கறிஞர் கவி.கணேசன் மாவட்ட பொருளாளர் எம்.ஆனந்தன் , பொதுக்குழு உறுப்பினர்கள் இரா. முருகேசன், டி.ஏ. ராஜ், பகுதி கழக நிர்வாகிகள் ந. திருசங்கு, இ. குமரவேல், யு. எஸ். குறளரசன், ஏ. இந்துமதி, எம். வஜ்ரவேல், மாவட்ட அமைப்பாளர்கள் ஆர். டி.மதன்குமார், ஆர். மோகனசுந்தரம் , மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.தினேஷ்குமார், எம். சந்திர குமார், ந. ராம்குமார், முருகா, எஸ். ஆறுமுகம், எஸ். ஆர்.மலைராஜ் எஸ்.கணேஷ் மற்றும் மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் பாக முகவர்கள் & BLC சமூக வலைதள பாக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-43க்குட்பட்ட தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் உதவி செவிலியர்களுக்கான (AUXILIARY NURSE MID WIFE) விடுதி கட்டுமானப் பணியினை (16.06.2025) அன்று மேயர் திருமதி ஆர். பிரியா அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), ஜே.ஜே.எபினேசர் (டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்), வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி மோ. ரேணுகா, திருமதி ந. பவித்ரா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருத்தணி நகராட்சிக்கு உட்பட்ட மேல் திருத்தணியில் பொதட்டூர்பேட்டை நெடுஞ்சாலையில் நீர்பாசனத்துறை க்கு சொந்தமான ஏரி பகுதியில் கோழி உள்ளிட்ட இறைச்சி கழிவுகள், குப்பை கொட்டப்படுவதால், பொதுமக்கள் கோரிக்கை வைத்த நிலையில் தகவல் அறிந்த திருத்தணி சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு குப்பை மற்றும் இறைச்சி கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டார் அருகில் திமுக நகர செயலாளர் வி.வினோத்குமார், நகர மன்ற உறுப்பினர் எஸ்.அசோக்குமார் உள்பட அரசு அதிகாரிகள் தூய்மை பணியாளர்கள் பொதுமக்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.